# மாகாண, மத்திய அரசு சேவைக்கான சகல பதவி உயர்வுகள், நியமனங்கள் உடன் நிறுத்தம்

அரச சேவைக்கான சகல நியமனங்களும் பதவி உயர்வுகளும், ஆட்சேர்ப்புகளும் உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளன. சமயாசமய நியமனங்கள், தற்காலிக நியமனங்கள் ஊர்ஜிதமாக்கப்படுவதும் நிறுத்தப்பட்டுள்ளன. இது சகல அரச நிறுவனங்கள், மாகாண அரச நிறுவனங்களுக்கும் பொருந்தும். இதுபற்றிய மேலதிக விபரங்களை அரசு இன்னும் சில தினங்களில் வெளியிடும் என தெரிவிக்கப்படுகிறது. சகல ஆசிரிய நியமனங்களும் இடைநிறுத்தப்படலாம் என முரசொலி முன்னர் செய்தி வெளியிட்டமை தெரிந்ததே. அமைச்சரவையின் இந்த முடிவு நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.


பக்கங்கள் எட்டு விலை ரூபா: 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 47 வெள்ளி 23-03-1990 (பங்குனி 10) ஷஃபான் 25


## பாணுக்கு விதிக்கப்பட்டுள்ள விலைக்கட்டுபாடு நீக்கப்படும்

பாணுக்கு விதிக்கப்பட்டுள்ள விலைக்கட்டுப்பாட்டை நீக்குவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாக வர்த்தக கப்பற்றுறை அமைச்சு தெரிவித்துள்ளது. பாணுக்கு விலைக்கட்டுப்பாடு இருந்த போதிலும் குறித்த விலைக்கு பாணை வழங்க முடியவில்லையென்ற பேக்கரிக்காரர்களின் முறைப்பாடுபற்றியும் விலைக்கு ஏற்ற நிறையுடைய பாணை வாங்க முடியவில்லை என பாவனையாளரின் புகார்களையும் கவனத்தில் கொண்டே அமைச்சு இந்நடவடிக்கையை எடுக்கவுள்ளது அமைச்சின் பாண் விலைக்கட்டுபாடு நீக்கம் பற்றிய முடிவு வெளிவரும்எனத் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகள் பொலிஸ், ராணுவத்தில் சேர ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும்

## இந்தியப்படை வெளியேறிய பின்பே நட்புறவு ஒப்பந்தம் குறித்து பேச்சு-ரஞ்சன்

விடுதலைப்புலிகள் பொலிஸ் அல்லது இராணுவத்தில் சேர விரும்பினால் அவர்கள் தமது ஆயுதங்களை ஒப்படைத்து விடவேண்டும் என பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன விஜேரட்ன தெரிவிததுள்ளார்.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் விடுதலைப்புலிகள் பாதுகாப்புப்படைகளில் சேர்வது குறித்து நிருபர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்கே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணம் முழுவதும் புலிக்கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளமை தொடர்பான ஒரு கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில் இது மக்களின் மகிழ்ச்சிப் பிரவாகத்தின் வெளிப்பாடே என்றார்.

இந்தியப்படைகள் அனைத்தும் வெளியேறிய பின்னரே

—8 ஆம் பக்கம் பார்க்க

## கோக்குவில் இந்து, யாழ் இந்து அதிபர்கள் இடமாற்றம் ரத்து

யாழ் இந்துக்கல்லூரி அதிபர் திரு. எஸ் பொன்னம்பலம் அவர்களுக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்லிங்கம் அவர்கட்கும் வழங்கப்பட்ட இடமாற்றங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்

— 8 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை, மாலைதீவிலும் இரு மாநாடுகளை நடத்த கோரிக்கை

மாலைதீவில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டுக்கு முதல் இன்னோர் மாநாட்டை இலங்கையில் நடாத்தும் படி ஜனாதிபதி பிரேமதாஸ பாகிஸ்தானிய அமைச்சர் யாகூப்கானை கேட்டுள்ளார்.

1990 ஆம் ஆண்டில் இரு மாநாடுகளை நடாத்தலாம் என்ற இந்தியாவின் யோசனை

— 8 ஆம் பக்கம் பார்க்க

## பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு விரைவில் பட்டதாரிச் சம்பளம்

1984ற்கும் 1988ற்கும் இடைப்பட்ட காலத்தில் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு 1988 ஒக்ரோபர் மாதத்திலிருந்து பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படவுள்ளது.

பட்டம் பெற்று, பட்டப்படிப்பிற்கு படித்த பாடங்களை உயர் வகுப்புக்களில் கற்பித்தும் பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படாத ஆசிரியர்களுக்கு அச்சம்பளத்தை வழங்க,யாழ்மாவட்ட கல்வித்

— 8 ஆம் பக்கம் பார்க்க

### க. பொ. த. சாதாரண பரீட்சையில்

## ஆள்மாருட்டம் செய்வோர்க்கு விடுதலைப்புலிகள் எச்சரிக்கை

இப்பாதம் முப்பதாம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆள்மாருட்டம், பார்த்தெழுதுதல், பரீட்சை மேற்பார்வையாளரை மிரட்டுதல், பரீட்சை மண்டபங்கட்கு அருகில் சந்தேகத்திற்கு இடமாக நடமாடுதல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு மட்டக்களப்பு,

— 8 ஆம் பக்கம் பார்க்க

## வன்னிக் கிணற்றில் தபால்கள்

மன்னார் தபால் நிலையம் செல்ல வேண்டிய நூற்றுக்கும் அதிகமான வெளிநாட்டுக் கடிதங்கள் வவுனியா தபால் நிலைய கிணற்றினுள் கிடந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறின. புதன் பகல் இக் கடிதங்கள் இக் கிணற்றினுள் இருந்து வவுனியா தபால் நிலைய அதிகாரிகளினால் மீட்கப்பட்டுள்ளன, இம் மாதம் இக் கடிதங்கள் மன்னார் மாவட்டத்தினைச் சேர்ந்த வெளி நாடுகளில் வசிப்பவர்களினால் தமது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டு இருந்தன.

### ஏழு வருடங்களின் பின் மீண்டும்

## யாழ் செயலக ஊழியர் சம்பளம் பணமாக வழங்கப்பட்டது

யாழ் மாவட்ட செயலக உத்தியோகஸ்தர்களின் மார்ச் மாதச்சம்பளம் நேற்று செயலகத்தில் வைத்து பணமாக வழங்கப்பட்டது.

கடந்த ஏழு வருடங்களாக செயலக உத்தியோகஸ்தர்களுக்கு மாதாந்தச் சம்பளம் காசோலையாகவே வழங்கப்பட்டு வந்தது. இதனால் இவர்கள் பல நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்தார்கள்

இது பற்றி ஏற்கனவே முரசொலி செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(03)

## அம்பாறை மாவட்ட கரும்பு காணிகளில் காணிப்பங்கீட்டில் தமிழர்கள் புறக்கணிப்பு

காணிப்பங்கீட்டில் இன விகிதாசார அடிப்படையில் காணிகள்வழங்கப்படும்என ஜனாதிபதி அறிவித்த போதிலும் அம்பாறை மாவட்டத்தில் ஹிங்குரான சீனிக்கூட்டுத்தாபனத்தின் கரும்புக்காணிகள் விநியோகத்தில் தமிழர்கள் பெருமளவு புறக்கணிக்கப்பட்டு சிங்களவர்களுக்கே காணிகள் வழங்கப்பட்டுள்ளதென அம்பாறை மாவடட கிழக்கு கரையோர விவசாயிகள் சம்மேளனச் செயலாளர் ஜனாப் ஈஸ்ரன் இப்ருகிம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது தமிழ் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் அம்பாறை மாவட்டத்தில் 4,074 விவசாயிகளுக்குகரும்புக்காணி

— 8 ஆம் பக்கம் பார்க்க

## காணி உறுதிகள் அழிந்ததால் வங்கியில்கடன் பெறமுடியாதநிலை

யாழ்மாவட்டக்காணிஉறுதிகள் அழிவடைந்ததனால் பலர் காணிக் கடன் பெறமுடியாத நிலையேற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வங்கிகளில் இக்கடன் பெறுவதற்கு காணி உறுதிப் பதிவுகள் முக்கியமாக சமர்ப்பிக்கப் படும்படி கேட்கப்பட்டுள்ளது. ஏனெனில் காணிபதியப்பட்டவருக்குமட்டுமே இக்கடன் வழங்க முடியும்.

இதனால் பலர் தமது [illegible]

—8 ஆம் பக்கம் பார்க்க

## நினைவஞ்சலிக் கொண்டாட்டத்திற்காக வாழை, தென்னை மரங்களை வெட்ட வேண்டாம்

நினைவஞ்சலிக் கொண்டாட்டங்களுக்காக வாழை, தென்னை கமுகு போன்ற மரங்களை வெட்டுவதை உடனடியாக நிறுத்துமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் [illegible] மட்டக்களப்பில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அன்னை பூபதியின் நினைவு தினக் கொண்டாட்டங்களுக்காக கடந்த இரண்டு நாட்கள் மட்டும் பத்தாயிரம் வாழை மரங்கள் வெட்டப்பட்டு கட்டப்பட்டதாகவும் இது நமது பொருளாதாரத்தைப் பெருமளவு பாதிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நமது பொருளாதாரத்தைப் பாதிக்காத மாவிலை, தோரணங்கள், தென்னோலைகள் என்பவற்றினைக் கொண்டாட்டங்களுக்காகப்பாவிக்குமாறு அவர் தெரிவித்தார்.

(05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி



## திரு. இராசரத்தினம் இராசரஞ்சன்

| மலர்வு | திதி | உதிர்வு |
| --- | --- | --- |
| 13-7–1963 | 23.3.1990 | 3-4-1989 |

அன்பின் ஒளிவிளக்காய், அறிவின் சிகரமாய், பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பொக்கிஷமாய் விளங்கி எம் குடும்பத்தின் குலவிளக்காய், எம்மை ஆருத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனுடன் சங்கமித்து, நீர் இவ்வுலகை விட்டுச் சென்று ஒரு வருடம் கடந்தாலும் நீர் கட்டிய மனக்கோட்டை எல்லாம் கனவாய் சுவைத்தாலும் என்றும் எங்கள் நெஞ்சில் உன் நினைவுகள் மாருது. உனது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்ருேம்

உமது பிரிவால் வாடும்

அப்பா, அம்மா, சகோதரங்கள்

மருமக்கள், உற்ருர், உறவினர்கள்

அ. இராசரத்தினம்,
16. அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம.

03133

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பின்வரும் 2 லொறிகளும் கார் ஒன்றும் விற்பனைக்கு உண்டு (1) 24 Sri 6431 BMCலொறி (2) 24Sri 3251 BMC லொறி (3) Car 8 Sri 3174 மொரிஸ் ஒக்ஸ்போட் (4) Paper cutter24Inches தொடர்பு கொள்ளவும். எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி 53, K.K.S. ரோட், யாழ்ப்பாணம். 03177

### விற்பனைக்கு

14 இஞ்சி கிறைண்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி 53, K K S வீதி, யாழ்ப்பாணம். 03183

## காங்கேசன்துறை வங்கிக் கிளையில் நிவாரணம்

காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளையில் இரண்டாம் கட்ட நிவாரணம் வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

எதிர்வரும் திங்கட் கிழமை யாழ்செயலக அதிகாரிகள் காங்கேசன்துறை இலங்கை வங்கியில் கொடுப்பனவு வேலைகளை ஆரம்பிக்கவுள்ளார்கள்.

(03)

## இரவுத்தபால் உறங்கலிருக்கை ஒரு வாரம் முன்பதிவு

எதிர்வரும் 26-ம் திகதி தொடக்கம் இரவுத் தபால் ரயில் உறங்கலிருக்கைப் பதிவுகள் யாவும் 7 நாட்களுக்குமுன்னரே பதிவுசெய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் அன்றைய தினமே இப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன.

(03)

## "M" Three Travel

### வழங்கும் உடனடிப் பிரயாணம்

சவூதி அரேபியா, (Saudi Arabia)

| | |
| --- | --- |
| Electrician (High Voltage) | 750 S.R |
| Mechanic | 700 S. R |
| Fire Man | 750 S. R |
| Hospital Cleaners (பெண்கள் மட்டும்) | 475 S. R |

மேற்கூறிய வெற்றிடங்களுக்கு நேர்முகப்பரீட்சை உண்டு.

★ நம்பிக்கை

★ நாணயம்

என்பவற்றிக்கு நீங்கள் நாட வேண்டிய தாபனம்

## "M" THREE TRAVEL

தலைமை அலுவலகம்:
"இந்திர பவனம்"
சோதி வீதி
காங்கேசன்துறை

கிளை அலுவலகம்:
இல 1, 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்

03185

## ENGINEERING COURSES

## London ECE Part-1

சர்வதேச அங்கிகாரமுடைய லண்டன் எஞ்ஜினியரிங் கவுன்சில் April 1991 பரீட்சைக்குரிய பாடநெறிகள்

**Marconi Institute of Technology**
நிறுவனத்தால் April 199ɹ தொடக்கம் கற்பிக்கப்படும்

G.C.E. A/L பரீட்சையில் பௌதிக விஞ்ஞான பாடங்களில் சித்தி பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்க விரும்பினல்,

பிரதம விரிவுரையாளர்
திரு. எஸ். கனகசபை M Sc. (B'ham)
B Sc. Eng. (Lond), B Sc. (Cey),
P. Eng. (APEO, Canada), M.I.E.E.E, (USA)
அவர்களை நேரில் சந்திக்கவும்

இடம்:
**BOND INSTITUTES**
**58 A, Stanley Road, Jaffna.**

நேரம்:
1990 March 24ம் (சனி) 25ம் (ஞாயிறு) திகதிகள்
காலை 8:30 – மாலை 4.30 மணிக்கிடையில்

MIT MATHAGAL

03287

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படி ஒரு செயல் எப்படி ஒரு முஸ்லிம்

வடக்கு-கிழக்கு மாகாணசபை தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் விடுத்துள்ள அறிக்கைகள் தமிழ் மக்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

வட-கிழக்கு மாகாணசபையைத் தம்மிடம் ஒப்படைக்குமாறும், தாம் அதை கலைக்குமாறு ஆளுநரிடம் கோருவோம் என்றும் வடகிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் ஜனாப் இஸதீன் தெரிவித்துள்ளார்.

அதே சமயம் பிரிவினைக்கு எதிரான 6 வது திருத்தச்சட்ட மூலத்தை அரசு நீக்குவதற்குத் தாம் ஒத்துழைக்கப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மாகாணசபையானது இன்று இயங்க முடியாததொன்றாகிவிட்டது. இனிமேல் அது அவசியம் கலைக்கப்பட வேண்டியதொன்று என்பதில் எதிர்க்கட்சியினர் உட்பட எவருக்கும் மறுகருத்து இல்லை.

இதை ஆமோதிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர், அதே சமயம் நான்கு மாகாணசபை முஸ்லிம் அமைச்சர்களின் பெயர் கொண்ட பட்டியல் ஒன்றையும் ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ளது சந்தேகத்தையே தருகின்றது

தமிழ் பேசும் மக்கள் என்று கூறும் போது அது தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரையுமே குறிக்கின்றது என்பதை முஸ்லிம் காங்கிரஸ் மறந்துவிடக்கூடாது.

# இதயநாதம்

வெள்ளிக்கிழமை 23-03--1990

## நல்வாக்கு

*தம் அடுத்த வீட்டானுக்கு அக்கிரமம் செய்து அதனால் அவர்களை நிம்மதியாக வாழ்க்கை நடத்த விடாதவன் சுவர்க்கம் செல்ல முடியாது.*

-நபிகள் நாயகம்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

நீண்டகாலமாகத் தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிரிவினைக்கான கலவரங்களைப் பல தீய சக்திகள் தூண்டிவந்தன.

இத்தகைய தீய சக்திகளின் கைப்பிடிக்குள் முஸ்லிம் காங்கிரஸ் சிக்கிவிடக்கூடாது.

பிரிவினைவாதத்திற்கு எதிரான 6 வது திருத்தச்சட்டமூலத்தை நீக்க வேண்டும் என்று சகல தமிழ் இயக்கங்களும், கட்சிகளும் தமது வேறுபாடுகளை மறந்து குரல் கொடுத்துள்ளன.

ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் இதற்கு ஒத்துழைக்காது என்று அறிவித்துள்ளது தமிழ் மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

6 வது திருத்தச்சட்டமூலம் நீக்கப்பட வேண்டியதொன்று என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதற்காக அது சகல கட்சிகளிடமும் ஒத்துழைப்பைக் கேட்கவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

தமிழருக்குப் பிரிந்து செல்வதற்கான சுய நிர்ணய உரிமை உண்டு என்பதை ஒத்துக்கொள்ளும் எவரும் பிரிவினைவாதத்திற்கெதிரான 6 வது திருத்தச்சட்ட மூலத்தை எதிர்க்கவே செய்வார்கள்.

பிரிவினைவாதம் என்பது உடனே பிரிந்து போவதற்காகக் கேட்கப்படும் ஒன்றல்ல.

அந்த எச்சரிக்கை மூலம் பிரிந்து போகாமல் வைத்திருக்க அரசு முயற்சிக்க வேண்டும் என்பதேயாகும்

விவாகரத்துச் சட்டமானது சகல குடும்பங்களும் பிரிந்து போவதற்காகக் கொண்டு வரப்பட்டதல்ல. அது இருக்கின்றது என்ற எச்சரிக்கை மூலம் மனைவியைக் கணவன் கவனிக்க வேண்டும் என்பதே.

இதேபோன்றதே, பிரிவினைவாதமும், சுய நிர்ணய உரிமையும், தமிழ் மக்களிடமிருந்து பிரிந்து போகக் கூடியதான முஸ்லிம்களுடைய சுயநிர்ணய உரிமையைத் தமிழ் மக்கள் அங்கீகரிக்க வேண்டும் என்று முஸ்லிம்கள் விரும்புகின்றனர்.

இது நியாயமாயின் அவர்களும் சிங்களவர்களிடமிருந்து பிரியும் தமிழ் மக்களுக்கான சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்.

எனவே 6 வது திருத்தச்சட்ட மூலத்தை திருத்துவதற்கான ஒத்துழைப்பை முஸ்லிம் காங்கிரஸ் வழங்க வேண்டியது அவசியமாகிறது.

## டானியலின் நான்காவது ஆண்டு நினைவுதினம் இன்று

# தமிழர் பண்பாடும் டானியலும்

ஈழத்துத்தமிழ் எழுத்தாளர்களில் டானியலின் எழுத்துப் பணியை மதிப்பிடும்போது அவரது முழுமையான ஆளுமை புலப்படுகின்றது. சாதாரண மக்களின் நடைமுறைகளைக் கூர்மையாக அவதானித்து அந்நடைமுறைகளைப் பொருத்தமாகத் தனது நாவல்களிலே வடித்து வைத்தவர் டானியல். அவருடைய எழுத்துக்கள் மனித வாழ்க்கை அனுபவங்களாக அமைந்தமையால் காலத்தால் அழியாத பண்புடையன. நாவல் என்ற மேலைத்தேய இலக்கிய வடிவத்தின் பூரணமான அமைப்பை டானியலின் நாவல்கள் பிரதிபலிக்கவில்லை என்ற இலக்கியவாதிகளின் கருத்து ஒருபுறமிருக்க, டானியல் நாவல்களைப் பண்பாட்டுத் தரவுகளாகக் காணும் ஆய்வாளர்கள் அந்நாவல்களின் வடிவ அமைப்பைக் கவனிக்க வேண்டிய தேவையில்லாமற் போய்விடுகின்றது.

சமூகவியல் ஆய்வாளர்கள் தரவுகளை இலக்கியங்களிடையே தேடிச் செல்லும் போது இலக்கியங்களின் வடிவம் பற்றியும் ஓரளவு தெரிந்து கொண்டே அவற்றைத் தேடிப்போக வேண்டும். எனினும், சில வேளைகளில் வடிவம் பற்றிய ஆய்விலே தம்முடைய கவனத்தைச் செலுத்தாது, தரவுகளின் தேட்டம் நோக்கி நாவல்களிடம் சமூகவியலாளர் போகவேண்டிய தேவையுமுண்டு. ஆய்வுத் தரவுகளின் பதிவு மொழிநடையால் சிறப்புற விளங்கும். டானியலின் நாவல்களிலும் சிறுகதைகளிலும் அம்மொழி நடையின் தனித்துவத்தால் தரவுகளும் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இத்தரவுகள் ஆய்வுகளுக்கும் பயன்பட வேண்டியவை என்ற ஒரு எண்ணம் நாவலையோ சிறுகதையையோ எழுதும்போது டானியலுக்கு இருந்தது என்பதை அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் அனைவருமே அறிவர்.

அவரது முன்னைய நாவல்களில் உள்ள தரவுகள் பற்றிய விளக்கங்களை மேலும் தெளிவாகவும், விரிவாகவும் அறிவதற்காக வெளிநாட்டு ஆய்வாளர் சிலர் கடிதமூலம் அவருடன் தொடர்பு கொண்டனர். இத்தகைய தொடர்புகள் டானியலைப் பிற்கால நாவல்களிலே மேலதிகத் தகவல்களைக் குறிப்பிடவைத்தன என்றும் கூறலாம்.

'அடிமைகள்' நாவல் தொடக்கம் அதன் பின்னர் அவர் எழுதிய நாவல்கள், குறுநாவல்கள் யாவும் இவ்வாய்வு நிலைத் தரவுகளை ஆவணப்படுத்துவதிலே முன்நிற்கின்றன இது காரணமாக நாவல் வடிவமைப்பு சிர்குலைய நேர்ந்தது என்றுங் கூறுவதற்கில்லை. யாழ்ப்பாணத்து நடைமுறைகளைப் பற்றிய விளக்கங்களை நாவலின் கதையினூடாகவே டானியல் வெளிப்படுத்தியுள்ளார். கதாபாத்திரங்களின் உரையாடல்கள் மூலமாகத் தரவுகள் பொருத்தமாகவே வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

குறிப்பாகப் பெண் பாத்திரங்களின் மொழிநடையில் நடைமுறைகளைப் பற்றி டானியல் விளக்கும்போது பாத்திரப் படைப்பும் சிறப்புப் பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்து மண்ணின் குரலாக டானியலின் நாவல்கள் அமைய இதுவே காரணமாகின்றது. டானியலுக்குப் பின்பு இத்தகைய பண்பாட்டு விளக்கத்துடன் நாவல்கள் இன்னும் வெளிவரவில்லை.

டானியல் மறைந்து நான்கு வருடகால இடைவெளியில் அவரது 'கானல்', 'தண்ணீர்' என்ற நவல்களும் 'டானியல் குறுநாவல்கள்' என்ற தொகுப்பும் வெளிவந்துள்ளன. 'கானல்' நாவல் இந்தியாவிலே பிரசுரமாயிற்று. ஏனைய இரண்டும் இலங்கையிலே பிரசுரமாயின. அவருடைய நூல் வடிவு பெறாத குறுநாவல்கள் இன்னும் சில உள. குறிப்பாக, அவர் எழுதிய ''சாநிழல்'' என்ற குறுநாவல் வெளிவர வேண்டியது அவசியம். டானியல் என்ற எழுத்தாளனின் இறுதிப்படைப்பு என்ற சிறப்பு அதற்குண்டு. இன்னும், அதன் தலைப்பு டானியலின் இறுதிக் கால கட்டத்து மனநிலையைப் பிரதிபலிப்பதாகவும் அமைந்திருக்கலாம்; அக் குறுநாவலின் பிரதி துரதிர்ஷ்டவசமாக எங்கோ ஒரு மூலையிற் கிடக்கின்றது. அதை யாராவது தேடியெடுத்துப் பிரசுரிக்க வேண்டும். இன்னும், ''சாநிழல்'' என்ற தலைப்பில் இரண்டு குறுநாவல்கள் அவர் எழுதியுள்ளார் எனவும் அறியக்கிடக்கின்றது. அவ்வாறு இரண்டு குறுநாவல்களை அவர் எழுதவேண்டிய தேவை என்னவென்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒன்று, இலங்கையில் அவர் இருக்கும் போது எழுதியதாகவும், மற்றையது இறுதிக்காலத்தில் இந்தியாவில் அவர் இருக்கும் போது எழுதியதாகவும் அறிகிறோம். 'பஞ்சகோணங்கள்' என்ற தலைப்பில் அவர் எழுதிய நாவல் இன்னும் வெளிவரவில்லை. தமிழ்நாட்டிலுள்ள அவருடைய நண்பர்கள் சிலர் அந் நாவலை அச்சிட்டு வெளியிட முயற்சி செய்வதாகவும் அறிகிறோம்.

ஓர் எழுத்தாளனுடைய பணிகளைப் பற்றி அவன் வாழுங் காலத்திலேயே நாம் பெரிதும் சிந்திப்பதில்லை. அந்த எழுத்தாளன் மண்ணுலகிலிருந்து மறைந்த பின்பும் சிந்திக்காமல் இருப்பது தவறு. எழுத்துப் பணியால் பல தேவைகளை நிறைவேற்றும் ஆற்றல் எழுத்தாளனுக்கு உண்டு. அவ்வாற்றல் அவன் வாழும் காலத்திலே பிறரால் மதிக்கப்படாத போதும் மறைந்த பின்னராவது நினைக்கப்பட வேண்டும். கடந்த நான்கு வருடகாலங்களில் பல தடவைகள் டானியலின் இழப்பை எண்ணி நாம் வருந்தியிருந்தியிருக்கிறோம். ஆய்வு நிலையிலே பல சந்தேகங்களைத் தெளிவுபடுத்த அவருடன்கலந்தாலோசிக்க முடியவில்லையே என்ற மனவருத்தம் எம்மை விட்டு என்றுமே அகலாது. செம்பொங்கல் பற்றிய கட்டுரையைப் பார்த்த பேராசிரியர் ஒருவர் யாழ்ப்பாணத்திலே செந்நெல் இருந்ததா என்று கேட்கின்றார் இவ்வேளைகளிலே தான்டானியல் யாழ்ப்பாண நடைமுறைகள் சிலவற்றையாவது ஆவணப்படுத்தி வைத்துள்ளார் என்றுவது எண்ண வேண்டியுள்ளது. இன்றுடானியல் தன் நாவல் குறிப்பிட்டுள்ள சில நடைகளிலேமுறைகளைப்பற்றிநேரிற் போய் அறியவும் வாய்ப்பில்லை. ஏனெனில், அந்நடைமுறைகள் பல நாகரிக மற்றவையெனக் கருதப்பட்டுக் கைவிடப்பட்டுள்ளன. பல நடைமுறைகளைக் குறிக்கும் தமிழ்ச் சொற்களின் இடத்தைப் பிறமொழிச் சொற்கள் பிடித்துக் கொண்டுள்ளன. பேச்சு வழக்கிலே இருந்த பல விடயங்களைப் பற்றிய தகவல்களையும் விளக்கங்களையும் தரத்தக்க

— 4ஆம் பக்கம் பார்க்க

# தமிழ்நாடு பேராசிரியர் கலாநிதி பொன் கோதண்டராமன் டானியலின் 'கானல்' நாவல் பற்றி கருத்துரை

'கானல்' ... நெடுநாட்களுக்கு முன்பே படிக்க விரும்பியநூல் இப்போதாவது படித்து முடித்தோமே என்பதில் ஒரு மனநிறைவும் மகிழ்ச்சியும் இருக்கிறது. இலங்கைத் தமிழ்த் தோழர் எழுதியது தமிழகத்தில்வெளிவந்தது இதைப்படிக்க டோக்கியோவில்தான் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. இந்த வாய்ப்பை எனக்குவழங்கியவர்பேராசிரியர் அசுகுஒனோ அவர்களின் தமிழ்-ஜப்பானிய ஆய்வுக்குஉதவி புரிந்து வரும் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள். மரபுபழக்கவழக்கம் சடங்கு, பண்பாடு என்று இப்படி எத்தனையோ கருத்துவழிப் போர்க்கருவிகளால் வெளியே தெரியாமல் காலங்காலமாகத் தாக்கப்பட்டு முடக்கப்பட்டு வரும் எளியவர்களைக் கருத்துவழிப்போர்க் கருவிகள் தாக்குதலிலிருந்து காப்பாற்றி நிமிரவைத்து வாழவைப்பதற்குப் பல்வேறு முயற்சிகள் தேவைப்படுகின்றன. அத்தகைய முயற்சிகளில் டானியல் அவர்களின் இலக்கிய முயற்சி ஒரு சிறப்பான முயற்சியாக அமைந்திருக்கிறது ஏமாற்றப்பட்டுக் காலங்காலமாகத் துன்பத்தில் உழலும் ஒரு பிரிவினர் புதுப்புது வழியில் புதுப்புதுக் கூட்டங்களால் ஏமாற்றப்படுவது என்பது நினைத்துப்பார்த்தால் நெஞ்சை எரிமலையாக்கிவிடும். அதற்கு மேலும் ஏமாற்றப்பட்டவர்கள் ஏமாற்றத்தை வெளியில் சொல்ல முடியாத நிலையில் மாட்டிக்கொண்டால் அது மிகக் கொடுமையான சித்திரவதைதான். இந்த நிலைகள் எல்லாவற்றையுமே எல்லார்க்கும் விளங்கும் வகையில் இந்த நாவல் கண்முன் கொண்டுவந்து காட்டுகிறது. மிகுந்த மனிதநேயத்தோடும் சரியான கண்ணோட்டத்தோடும் இந்த நாவலை ஆசிரியர் படைத்திருக்கிறார் என்பதைப் பலவரும் உரையாடல் பகுதி நமக்கு உணர்த்தி நாவலை முழுமைப்படுத்திக் கலைப்படைப்பின் தரத்தை உயர்த்துகிறது. "எல்லாச் சாதிக்கையும் எல்லா மாதிரியான மனிசரும் இருப்பினம் பின்னை; சில சில சாதியிக்கை கூடக் குறைய இருப்பினம். அதிலும் எல்லாச் சாதியிக்கையும் பணக்காரச்சாதி ஒண்டு நெடுக இருக்கு. அந்தச் சாதியிக்கை சேர்ந்தவங்களெல்லாம் இரணியச் சாதி பிள்ளை;" கானல் ப. ம். 304

கலாநிதி பொ. கோதண்டராமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்டத்தில்

# 435 கிராமசேவகர் பிரிவுகளில் 55 வெற்றிடமாக உள்ளது

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது 435 கிராமசேவகர் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 380 கிராம சேவகர் பிரிவுகளுக்கே கிராம சேவை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மிகுதி 55 கிராம சேவகர் பிரிவுகளுக்கும் கிராம சேவகர்கள் நியமிக்கப்படவில்லை. இப்பிரிவுகள் காலியாகவே உள்ளன.

மேலதிகமாக உருவாக்கப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளுக்குப்பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களாகவும், விவசாயச் சேவையாளர்களாகவும் கடமையாற்றியவர்கள் பதவி மாற்றம் செய்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய கிராமசேவகர் பிரிவுகள் இம் மாதம் 15-ம் திகதி தொடக்கம் இயங்கி வருகின்றது. மேலும் இடமாற்றப் பெயர்ப்பட்டியலில் உள்ள சிலர் வெளிநாடு சென்றுள்ளதாகவும் தெரியவருகின்றது. இதன் காரணமாக யாழ். மாவட்டத்தில் உள்ள கிரரம சேவகர் வெற்றிடங்கள் மேலும் அதிகரிக்கச் கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் தெரியவருகின்றது. (43)

# இனிமேல் உப்புஉற்பத்தியாளர் தனியாருக்கும் உப்பு விற்கலாம்

கடந்த 40 வருடங்களாக நீடித்துவந்த அரசின் உப்புச் சட்டதத்தில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது.

இதன் மூலம் உப்பு உற்பத்தியாளர்கள் உப்பை தாம் விரும்பியவர்களுக்கு விற்பனை செய்ய முடியும். அரசிற்கே உப்பை கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் இனி இருக்காது.

1945ஆம் ஆண்டு உப்புச் சட்டத்தின்படி உப்பு உற்பத்தியாளர்கள் தங்களது உப்பை வெளியாருக்கு விற்க முடியாது அரசிறகே விற்க முடியும். உற்பத்தியாளர்கள் தங்கள் வீட்டுப் பாவனைக்குத் தானும் உப்பை கொண்டு செலல முடியாது.

இந்த நிலையில் உற்பத்தியாளர்களிடமிருந்து அந்தர் 9 ரூபா 75 சதத்திற்கு கொள்வனவு செய்து சந்தையில் 37 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதனால் தமது சொந்த உப்பளங்களில் உப்பு உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் ஆக ஒரு கிலோ உப்பை 9 சதத்திற்கே விநியோகின்றனர் இதனால் அவர்கள் பெரும் பாதிப்பு அடைந்து வந்தனர்.

# மட்டு. மாவட்டத்தில் 429பேருக்கு ஆசிரிய நியமனம்

மட்டக்களப்புமாவட்டத்தில் பயிற்சி ஆசிரியர்களாகதெரிவு செய்யப் பட்டவர்களுக்கான நியமனக்கடிதங்களை கல்விப் பணிப்பாளர் திரு.இ. சற்குணராசா கடந்த வியாழக்கிழமை வழங்கினர் மட் / சிசிலியா மகளிர் கல்லூரியில் வைபவரீதியாக இந்நியமனங்கள் வழங்கப்பட்டது.

இவ்வைபவத்தில் 300 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன, எதிர்வரும் 19-ம் திகதி 129 பேருக்கான நியமனம் வழங்கப்படும். மட்/மாவட்தில் 5622 விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை, எழுதுப்பரீட்சைக்கு தோற்றினர் இவர்களில் 429 பேர் பயிற்சி ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எனபிரதி கல்விப்பணிப்பாளர் திரு. கே. சோமசுந்தரம் தெரிவுத்துள்ளார். (05)

# வடமராட்சி கிழக்கில் 18 கிராமசேவகர் பிரிவுகள்

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஏழு புதிய கிராம சேவகர் பிரிவுகள் உண்டாக்கப்படுவதையடுத்து கிராமசேவகர் பிரிவுகள் 18ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள எல்லாக் கிராம சேவகர் பிரிவுகளுக்கும் கிராம சேவையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் இம் மாதம் 15ம் திகதி முதல் அவர்கள் தங்கள் கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

இப்பகுதியில் உள்ள 18 கிராமசேவகர் பிரிவுகளில் செம்பியன் பற்று வடக்கு பிரிவுக்கு கிராமசேவகர் நியமிக்கப்படவில்லை இப்பிரிவு காலியாகவே உள்ளது. (43)

# ஜெய்ப்பூர்கால் தொழிற்சாலையில் முச்சக்கரவண்டிகள் அன்பளிப்பு

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பொருத்தப்பட்டோர் சங்கத்தின் வருடாந்த மாநாடு 24-ம் திகதி சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு மேற்படி சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தையடுத்து யாழ். அன்னையர் முன்னணியினரால் மூன்று சில்லுச் சைக்கிள்களும் ஜெய்ப்பூர்க் கால் பொருத்தப்பட்டோருக்கு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

# சண்டிலிப்பாய் உ. அ.அ. பிரிவு கழக விளையாட்டுப் போட்டிகள்

விளையாட்டு அமைச்சின் ஆதரவில்சண்டிலிப்பாய்உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான வருடாந்த விளையாட்டுக் போட்டி எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமையன்று மானிப்பாய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. க. சிவசம்பு தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் பிரதம அதிதியாக மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. செ. கேசவராஜன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. சே. ஏகாம்பரம் கலந்து கொள்வார். வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ். கல்யாணசுந்தரம் வழங்குவார். (18)

திருமலை புலிகளின் முன்னனி பொறுப்பாளர் ரூபன்

# தமிழரின் பாதுகாப்பிற்கும் ஆயுதங்களுக்கும் தொடர்பு

வடகிழக்கு தமிழ் பேசும் மக்களிடம் ஒரு நம்பிக்கையான பாதுகாப்புச் சூழ்நிலையை ஏற்படுத்தும் மூகமாகவே விடுதலைப்புலிகளிடம் ஆயுதங்கள் இருக்கின்றன. தமிழரின் பாதுகாப்புக்கும் எமது ஆயுதங்களுக்கும் தொடர்பு இருக்கிறது. இவ்வாறு விடுதலைப்புலிகளின் திருமலை அரசியல் பொறுப்பாளர், ரூபன் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்

தமிழர்களது போராட்டம் கடந்த நாற்பது வருடங்களாக நடைபெற்று வந்தது இதில் புலிகள் 1972 முதல் ஆயுத போராட்டத்தை ஆரம்பித்தனர். எனினும் 1983 இல் தான் ஆயுதப்போராட்டம் உச்ச வலுவை அடைந்தது. இன்று இந்த ஆயுதங்களினால் தான் எமது பிரச்சனை வெளியுலகிற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது அல்லது எமது போராட்டம் இன்றும் வெளியுலகிற்கு தெரியாது தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

இந்தியப்படைகளிடம் நாம் ஆயுதங்களை ஒப்படைத்தபின்னரே தமிழ் பேசும்மக்கள் கொல்லப்பட்டனர் எனவே பாதுகாப்பான சூழ்நிலை ஒன்று உருவாகினால் தான் தமிழரிடையே பாதுகாப்புணர்வு ஏற்படும் என ரூபன் தெரிவித்துள்ளார்

மாகாணசபை தேர்தல் பற்றி கேட்டபோது' புலிகள் மூன்று நிபந்தனைகள் விதித்துள்ளனர். இந்தியப்படை முற்றாக வெளியேற்றம், தமிழ் தேசிய இராணுவ ஒழிப்பு மாகாணசபை கலைப்பு, இவை நிறைவேறினால் மாகாண சபையை தற்காலிக நிர்வாகக் கொண்டு புலிகள் தேர்தலில் பங்குபற்றுவர் என புலிகளின் திருமலை அரசியல் பொறுப்பாளர் ரூபன் தெரிவித்திருக்கின்றார்.

# ரூபவாஹினியில் ஞாயிறுதோறும் பிற்பகலில் தமிழ் நிகழ்ச்சிகள்

ரூபவாஹினியில் ஞாயிறு தோறும் பிற்பகல் ஒரு மணி முதல் மூன்று மணிவரை தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படவுள்ளன தகவல் துறை இராஜாங்க அமைச்சர் திரு. ஏ. கே. ரணசிங்க அதற்கான பணிப்புரையை ரூபவாஹினியின் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியுள்ளார்.

சித்திரை தமிழ் சிங்கள புத்தாண்டு தொடக்கம் இப்புதிய ஒளிபரப்பு நடைமுறைக்கு வருமென தெரிவிக்கப் படுகிறது. அமைச்சர்கள் எஸ். தொண்டமான், பி. பி. தேவராஜ் ஆகியோரின் முயற்சிகளையடுத்தே இது நடைமுறைக்கு வரவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவு மூடுவது குறித்து இஸ்ரேல் கவலை

இலங்கையில் உள்ள இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவை மூடுமாறு இலங்கை அரசுகேட்டுக் கொணடமை தொடர்பாக இஸ்ரேல் கவலை தெரிவித்துள்ளது

இலங்கை அரசின் இந்த போக்கு தமக்கு கவலையளிப்பதாகவும் ஏமாற்றம் அளிப்பதாகவும் உள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இலங்கையின் இந்த முடிவுக்கு என்ன காரணம் என தமக்கு தெரியவில்லை எனவும் இஸ்ரேல் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்,

இதேவேளை இலங்கையின் இம்முடிவை பாலஸ்தீனியவிடுதலை இயக்கம் வரவேற்றுள்ளதுடன் மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளது.

# இலங்கை வங்கி இவ்வார நிவாரணம்

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் 24 ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 1 மணிவரை வண்ணார்பண்ணை வடமேற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 1265 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்தல் 2 ம் கட்ட நிவாரணப் பணம் ரூபா 1000/ வழங்கப்படும். 25 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் நண்பகல்ஒருமணி வரை கோண்டாவில் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 1394 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்த்தல் 2 ம் கட்ட நிவாரணப் பணம் ரூபா 1000 வழங்கப்படும்.

# கிளிநொச்சி கிராமங்களில் சிற்றூர் அவைகள் அமைப்பு

கிளிநொசசி மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள கிராமங்களில் சிற்றூர் அவைகள் வெகுதுரிதமாக அமைக்கப்பட்டுவருகின்றன.

இம் மாவட்டத்தில் எல்லா உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் சிற்றூர் அவைகளை அமைபபதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதுடன், கிளிநொச்சி நகரை அண்மித்த கிராமசேவையாளர் பிரிவுகளில் கடந்தவாரம் 11பேர்கொண்ட சிற்றூர் அவைகள் அமைக்கப்பட்டுமுள்ளன. எஞ்சிய இடங்களிலும் சிற்றூர் அவைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. (35)

# வலது குறைந்தோர் விளையாட்டுச் சங்கம்

வட- கிழக்குப் பகுதிகளில் வலது குறைந்தோர் விளையாட்டுச்சங்கம் ஒன்றினை உருவாக்கும் நடவடிக்கைமேற்கொள்ளப் படடு வருகின்றது

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து தலா 7பேர் வீதம் விளையாட்டுவீரர்கள் தேர்ந் தெடுக்கப் பட்டு இச் சங்கம் அமைக்கப்படவுள்ளது.

# 1500புதிய மின் திட்டங்களுக்கு ஆசிய அபிவிருத்திவங்கி உதவி

ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும் வெளிநாட்டுக்கடன் உதவித் திட்டத்திற்கு அமைய நாட்டில் 1500 புதிய மின்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன இதன் மூலம் 75000 கிராம வீடுகளுக்கு இவ்வருட நடுப்பகுதியளவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக மின் சக்தி, எரிபொருள் அமைச்சர் திரு. பெஸ்ரஸ்பெரேரா தெரிவித்துள்ளார்.

மண்ணெண்ணெய்க்காக கிராம மக்கள் மாதமொன்றுக்கு சராசரி நூறு ரூபா செலவழிக்கின்றனர். இந்த மின்சார விநியோகம் மூலம் இதை சேமிக்கமுடியுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

# கோண்டாவிலில் நினைவுத்தூபி

இது நாள் வரை மரணமடைந்துள்ள தமிழீழ விடுதலை புலிகளின் ஞாபகார்த்தமாக கோண்டாவில் புலிகள் காரியாலயமுன்றலில் நினைவுத்தூபி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. ஏறக்குறைய 25 அடி உயரத்தில இது அமைக்கப்படுகின்றது. (41)

# வடமராட்சி கிழக்கில் மாத்தயா

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராசா மாத்தயா வடமராட்சி பொறுப்பாளர் திரு சூசை ஆகியோர் கடந்த ஞாயிற்றுக் கிழமை வடமராட்சி முகப் பகுதிக்கு விஜயம் செய்து ஆதரவாளர்களைச் சந்தித்து உரையாடினர்கள்.

இச்சந்திப்பின்போது மக்களின் பிரச்சனைகளை மிகவும் ஆர்வமாக கேட்டறிந்த திரு. கோ. மகேந்திரராசா பிரச்சனைகளை சுலபமாக தீர்ப்பதற்கு பொதுமக்களும் தமக்கு உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

வடமராட்சி கிழக்கு முன்னாள் பொறுப்பாளர் வீரமரணமடைந்த வெற்றிலைக்கேணி கப்டன் ராஜாராம் (வீ. தர்மலிங்கம்) வீட்டிற்கு விஜயம் செய்து அவரின் குடும்பத்தினருடன் அளவளாவினர். (18)

தமிழர்...........

நடமாடும் நூலகமாக இருந்த தோழர் கே. டானியலின் மறைவு பெரியதோர் இழப்பாகும், எனினும் அவர் காட்டிச்சென்ற வழியிலே யாழ்ப்பாணப் பண்பாட்டுத் தகவல்களைத்தேடி அவற்றை ஆவணப்படுத்த நாம் எம் உழைப்பை நல்க வேண்டும். அதுவே டானியலின் பெயர் என்றும் நிலைக்கவும் எம்பணி சிறக்கவும் வழிசெய்யும்.

# வன்செயலால் பாதிப்பு யாழ் மாவட்டத்தில் குறைவு

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட மக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் யாழ் மாவட்ட மக்கள் வன்செயல்களினால் அதிகம் பாதிப்படையவில்லை,

இவ்வாறு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இலங்கையின் வடக்குப் பகுதிகளுக்கு விஜயத்தை மேற்கொண்டபோதே இத்தகவலை தெரிவித்தார். (03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ தவில்மேதை சின்னராசா 'முரசொலி'க்கு சிறப்புப்பேட்டி ★

# பாரத விஜயம் ஈடில்லா கீர்த்தி தந்த போதிலும்

# சிந்தை ஈழ மண்ணையே சுற்றிச் சுழன்றது

அந்த மனிதர்...சாமான்யர் அல்லர் சாணக்கியர். கருவில் திருவோடு இப்புவிதனில் ஜனனித்தவர். காட்சிக்கெளிமையாய் இருக்கின்றபோதிலும் மாட்சிமிகப்பெற்ற இலங்கை,பாரதம் உட்பட உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழ்கின்ற இலட்சோப இலட்சம் இசையுள்ளங்களில் தனித்துவ இடம் பெற்று இரண்டறக் கலந்திருப்பவர்.

இத்தனைச் சிறப்புக்கும் உரிய அந்த மாமனிதர்...தவில் மேதை என். ஆர். சின்னராசா அவர்களை அணுகி பேட்டி காண வேண்டுமென்ற ஆவலினால் உந்தப்பட்டு இணுவிலில் அமைந்துள்ள அவரது இல்லம் சென்ற போது, "வாங்கோ அண்ணை வாங்கோ" என்று வெற்றிலை, பாக்கு மென்றபடி அகமும், முகமும் மலர வாஞ்சையுடன் வரவேற்றார்.

அந்த மேதையுடனான பேட்டியில் அவரது மூன்று வருடகால பாரத விஜய அனுபவமே கருப்பொருளாக அமைந்துள்ளது.

அவர் சொன்னார்; இங்கு நிலவிய சாந்தியற்ற சூழ்நிலை காரணமாக ஓர் மனமாற்றத்திற்காகத் தமிழகம் சென்றேன், அங்கெல்லாம் தொடர்ந்து கச்சேரிகளில் கலந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் நான் பயணமாகும் வேளை என் இதயத்தில் இருக்கவில்லை, ஆனால்... அங்கு நான் பெற்ற அனுபவம், பெருமை இவையெல்லாவற்றையும் இக்கணம் எண்ணிப்பார்க்கின்ற போதிலும் உள்ளம் பரவசம் காண்கிறது. நெஞ்சம் பெருமிதத்தால் விம்முகிறது.

தமிழகத்தில் பல ஜில்லாக்களில் மட்டுமன்றி என் தவில் கச்சேரி தலைநகர் டில்லி கர்னாடகம், ஆந்திரா முதலான மாநிலங்களிலும் கூட இடம்பெற்றன. கீர்த்தி தந்தன சென்னையில் பிரபல்யமான சபாக்கள் பலவற்றிலும் என் நிகழ்ச்சிகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன. தூர்தசஷனும் என் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியது.

ஷேக் சின்ன மௌலானா, ஏ. கே. ஸி. நடராஜன், நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், மதுரை சேதுராமன், பொன்னுச்சாமி முதலான புகழ் பெற்ற முன்னணிக்கலைவிற்பன்னர்களுடன் ஒரே மேடையில் என் தவிலும் பிரதான ஸ்தானம் பெற்றது. அதே வேளை அங்கு இளம்மறைகாயாக உள்ள கலைஞர்களுடனும் நான் பங்கேற்றேன். அவர்களுக்கு உற்சாகமளித்து உதவவேண்டுமென்ற உத்தம நோக்குடன்.

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கல்யாணக் கச்சேரியில் கிளாரினெட் மேதை ஏ. கே. ஸி. அவர்கள் எனக்கும் அங்கு என்னுடன் இணைந்து வாசித்த என் புதல்வன் சுதாகரனுக்கும் மலர்க்கிரீடம் அணிவித்து பெருமை தந்தார். இந்நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் நாட்டு மக்கள் அனைவரும் பார்க்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டிருந்தது.

என் சொந்த நாட்டில் நான் பெற்ற பெருமையிலும் பார்க்கக் கூடிய பெருமையை அங்கு பெறமுடிந்தது அதற்கு எனது வித்வத்வ ஞானமே காரணம் எனக் கனிவுடன் கூற விழைகிறேன்.

பெரும் இசைமேதைகளுடன், நானும் மேடைகளில் சரிசமஸ்தானம் பெற்றேன். நான் இங்கு அனுபவத்தில் கேட்டிராத, அறிந்திராத அற்புதத் தாளங்களையெல்லாம் அத்திருமண்ணில் தவிலில் கண்டேன். விக்கித்துப் போனேன். பின் அதன் லாவகத்தை நானும் பற்றிப் பயின்றேன். இங்கு தவில் தாளங்களில் முப்பத்து ஐந்துக்குட்பட்டவையே கைக்கொள்ளப்படுகின்றன. அங்கு நூற்று எட்டு வகை கையாளப்படுகின்ற புதுமையைக்கண்டேன். 1988-ம் வருடம் விராவிமலை அருணகிரிநாதர் ஸ்தானத்தில் மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற கச்சேரியில் நாதஸ்வர இசை



ஆரம்பம் முதல் இறுதிவரை திருப்புகழையே வைத்து அமைந்திருந்த அற்புதத்தை அங்குதான் முதற்தடவையாகக் கண்டேன். தவில் மூலமான தாளங்களிலும் புதுமைகள் பல அங்கு எனக்குப் புலப்பட்டன.

நாதஸ்வர இசைக்கேற்ப அக்கச்சேரியில் தவில் வாசித்து

பேட்டிகண்டவர்
**கே. வி. ஆர். ஸ்ரீ.**

அமோக பாராட்டும் பெற்றேன்.

தமிழகத்தில் இசையுலகில் சினிமா ஆதிக்கம் இருக்கின்ற போதிலும் இசைக்கச்சேரிகளிலும் கர்னாடக சாஸ்திரிய சங்கீதத்தின்பால் மக்கள் அதீத ஆர்வம் கொண்டுள்ள தனிச்சிறப்பு உண்டு. சினிமாச்சமாச்சாரமெல்லாம் கான சபாக்களில் எடுபடாது. மேம்பட்ட ரசனையே அங்கு மேலோங்கிமிளிரும்.

தவில் என்றால் வெறுமனே ஒரு வாத்தியக்கருவி என்பதில்லை. தவில் ஆலயங்களில் கொடித்தவபத்திற்கு முன் வைக்கப்பட்டு அதற்கென கிரியைகள், பூஜை செய்யப்பட்டு ஆராதிக்கப்படுகின்றது. அத்தவிலின் தனிக்கீர்த்தியை பெரும், பெரும் சபாக்களில் தமிழகத்தில் வாசிக்கக்கிடைக்கப்பெற்ற வாய்ப்பு பெரும் பேறாகவே கருதப்படவேண்டியது.

தமிழகத்தைப் பொறுத்தவரை யாழ்ப்பாணத்தில் பூர்வீகப்பிணைப்பால் இணைந்த வலங்கைமான் சண்முகசுந்தரம், மற்றும் வலயப்பட்டி சுப்பிரமணியம், அரித்துவாரமங்களம் பழனிவேல், திருவாளப்புத்தூர் கலியமூர்த்தி முதலானோர் தவிலில் மிகப் புகழ் பெற்றுத் திகழ்கினர்கள். ஆயினும் ஈழத்தவனான என்னை சற்றும் பாகுபாடின்றி மதித்து மாண்பு தந்தார்கள். அவர்களது வியாபித்த மனதைப் பாராட்டியே ஆகவேண்டும்.

கிளாரினெட் ஏ. கே. ஸி. நடராசன் அவர்கள் என்னை [illegible] பகிரங்கமாக மனம் திறந்து பாராட்டியுள்ளார். என்னுடன் தவிலில் இணைந்த என் மாமனார் கணேஷுக்கும் அவரது ஆற்றலுக்கேற்ற மதிப்புக்கிடைத்தது.

மேற்கண்டவாறு தனது தமிழக அனுபவம் பற்றி விளக்கிய அவர், உணர்ச்சி வசப்பட்ட நிலையில் மற்றுமோர் தகவலையும் வெளியிட்டார்.

'சேலத்தில் சுகவனேஸ்வர உற்சவ வைரவிழாவின் போது பட்டமளிப்பும் இடம்பெற்றது அதில் ஏ. கேஸி நாமகிரிப்பேட்டை கிஷ்ணன் உட்பட அறுபது இசைக்கலைஞர்களுக்கு பட்டமளித்து பெருமையளிக்கப்பட்டது. அவர்களில் ஈழத்தவர் மூவர் நானும் என் மாமனாரும் மகனும் தான். சுகவனேஸ்வர ஸ்வாமி திருக்கல்யாணமண்டபத்தில் இவ்விழா நிகழ்ந்தது.' என்றார் அவர்.

"இசையுலகில் லயமேதையாய் விளங்குபவரும், தமிழர் அன்பால் கட்டுண்டு இருப்பவரும். புவியில் நன்றியுடன் வாழவேண்டும் என்று நினைப்பவரும் சகலகலாவல்வர் எனப் போற்றப்படுபவருமான தவில் மேதை யாழ்ப்பாணம் என். ஆர். சின்னராசாவிற்கு 'லயஞான கற்பனு சிரோன் மணி' என்று பட்டத்தை அளிக்கிறோம். அன்னாரின்புகழ் நீடுழி பல்லாண்டுகாலம் வாழ எல்லாம் வல்ல கிளிவளநாதன் அருள் புரிவானாகுக" என இவ்வாழ்த்து மடலில் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது.

'நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் என் மகன் சுதாகரன் மீது அலாதி அன்பு கொண்டவர் அவனது ஆற்றலால் ஈர்க்கப்பட்ட அவர் நேய பேலீட்டால் அவனைத் தழுவி,"சுதாக் குட்டி இன்னும் ஓஸோன்னு நீ வாசிக்கணும். மற்றதெல்லாம் நான் பாத்துக்ககிறேன்" என்று உணர்ச்சி பூர்வமாகச் சொல்லுவார். என் வாரிசுக்குக் கிடைத்த பெருமை கண்டு பூரித்துப்போவேன். எல்லாம், தெய்வ அருள்' இப்படி அவர் கூறுகையில் ஆனந்தக்கண்ணீர் உகுந்தார்.

'தமிழகத்தில்எவ்வளவுதான் பெருமை கிடைத்தபோதிலும் கூட என் நினைவுகள் யாவும் என் ஈழ மண்ணைச்சுற்றி சுழன்று கொண்டேயிருக்கும்." என்று சொன்ன அந்த தவில் மேதை தமிழகத்தில் இருந்து அமைப்புகள் வந்த வண்ணமுள்ளன. வசதிக்கேற்ப நான் அங்கு சென்றுவந்தாலும் ஈழ மண்ணில்தான் தொடர்ந்தும் இருப்பேன், அதில்தான் ஆத்ம ஆனந்தம் எனக்கு என்றும் பகர்கிறார்.

சின்னராசா அவர்கள் தாம் தவிலில் பெற்ற திறமையை, பெருமையை அடிப்படையாக வைத்து தன்னைக் குருவாகக் கொள்ளக் கூடிய குழாம் ஒன்பறையும் உருவாக்கித் தனித்துவம் பெறுகிறார். இதில் 'லயஞானசிரோன்மணி' தவில் வித்வான் திரு. ஆர். புண்ணியமூர்த்தியும் பிரதான மாகக் குறிப்பிடத்தக்க ஒருவராவார்.

## ஓசைச்சித்தன் நீ

வீத்தகனே!
உன்
பத்து விரல்களைக் கொண்டு
பரத நாட்டியமாடும்
ஓர் உன்னதமான
ஓசைச் சித்தன் நீ!

✳ ✳ ✳

தவிற் கச்சேரி என்பது
உன் போன்றோரால் தானே,
உயர்தரமான
தமிழ்க்கச்சேரி ஆனது!
உனது
கரங்கள் அசைந்த போதெல்லாம்
எமது
காதுகள் யாவும்
இசைந்து அசைந்தன

✳ ✳ ✳

காற்றைக் குளிப்பாட்டிப்,
பின் எங்கள்
காதைக் குளிப்பாட்டும்
உன்
கைவிரல் ஒலியை
நாம்
கனிந்துருகிக் காதலிக்கின்றோம்!
மேளக்கச்சேரியானது,
நீ செய்த போதெல்லாம்
இதயங்களுக்கும், இசைக்குமிடையிலான
ஒரு
பக்குவமான "பாலக் கச்சேரி" ஆனது!

ஜெ கி ஜெயசீலன்

## இன்று பாராட்டு விழா

கடந்த மூன்று ஆண்டுகளாகத் தென்னக இசைஉலகில் புகழ்க்கொடி நாட்டி நாடு திரும்பியுள்ள ஈழத்தின் பிரபல தவில் மேதை என். ஆர் சின்னராசா அவர்களைக் கௌரவிக்கும் முகமாக காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய இன்றைய மண்டலாபிஷேக பூர்த்தி விழாவின் மாலை நிகழ்ச்சியில் ஆலய நிர்வாகத்தினரும் காரைநகர் கம்பன் கழகத்தினரும் இணைந்து ஒரு பாராட்டு விழாவை ஒழுங்கு செய்துள்ளனர். இவ் விழாவில் தவில் மேதை என் ஆர். சின்னராசா பொன்னாடை, பதக்கம், சூட்டி கௌரவிக்கப்படுவார். இன்றைய நிகழ்ச்சிக்கு ஆலயமணி ஆசிரியர் புலவர் ஈழத்துச் சிவானந்தன் தலைமை வகிப்பர். காரைநகர் கம்பன்கழக அமைப்பாளர் திரு. ரி. சிவகுமாரன் வரவேற்புரை நிகழ்த்துவார். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், அன்னை துர்க்காதுரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சிவஸ்ரீ மகாதேவக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர். பாராளுமன்ற உறுப்பினர் சிவமகாராஜா அவர்களும், கலாநிதி வித்துவான் க. ந வேலன் அவர்களும் நாதஸ்வரக் கலாநிதி என். கே. பத்மநாதன் அவர்களும் வாழ்த்துரை வழங்குவர். பாராட்டுகளை கலைப்பேரரசு ஏ ரி பொன்னுத்துரை, யாழ் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் க நாகேஸ்வரன் (எம். ஏ.) காரைநகர் கம்பன்கழகத்தலைவர் திரு. ஏகநாதன், கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் ஆகியோர் நிகழ்த்துவர். மகாராணி ரெக்ஸ்ரைல்உரிமையாளர் திரு. சோமசேகரம் நன்றியுரைவழங்குவார். ஈழத்தின் பிரபல தவில்மேதைகள் இணைந்து கானமழை பொழிவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்மைச் சுற்றி நடப்பவை

அண்மையில் நடைபெற்ற ஆசிரியர்களின் கருத்தரங்கு ஒன்றில் ஓர் கருத்துக்கணிப்பு இடம் பெற்றது. அதில் 90 வீதமான ஆசிரியர்கள் காம் விருப்பமின்றி, சேவை மனப்பான்மையின்றியே ஆசிரியர் தொழிலுக்கு வந்ததாகத் தெரிவித்தனர். இவர்கள் தாம் 3 மாத லீவு, அரை நேரப்பள்ளி, வேலைப்பளுக் குறைவு, நல்ல சம்பளம், வாரத்தில் இருநாள் விடுமுறை ஆகியவற்றுக்காகவே இத்தொழிலை விரும்பியதாகத் தெரிவித்ததாக யாழ். மாவட்ட கல்வியதிகாரி ஒருவர் தெரிவித்தார். எமது வருங்கால மாணவ சமுதாயத்தை ஆண்டவன் தான் காக்க வேண்டும்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் கலாசார நடவடிக்கைகள் துரிதம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கலாசார நடவடிக்கைகளை விரிவுபடுத்த உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் கலாசார உத்தியோகத்தர்களை நியமிக்கவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவை கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சை கேட்டுள்ளது.

இனக்கலவரத்திற்கு முன் ஒவ்வொரு உதவிஅரசாங்கஅதிபர் பிரிவிலும் ஒரு கலாசார உத்தியோகத்தர் கடமையாற்றினார். தற்போது உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் கலாசார உத்தியோகத்தர் எவருமில்லை. எனவே ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும்ஒருகலாசார உத்தியோகத்தரை நியமிக்க வேண்டுமென கலாசார பேரவையால் தீர்மானிக்கப்பட்டது.

உடனடியாக பத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் கலாசார உத்திரோகத்தர்களை நியமிக்க முடியாவிட்டாலும் மட்டக்களப்பு. பட்டிருப்பு. கல்குடா ஆகிய மூன்று பகுதிகளுக்குமாவது கலாசார உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டுமென கலாசார பேரவை கல்வி கலாசார அமைச்சை கேட்டுள்ளது.

## மட்டு. பாடசாலை நூலகங்களுக்கு 840 நூல்கள் வழங்கப்பட்டன

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகளின் நூல் நிலையங்களுக்கு வழங்குவதற்கென 840 நூல்கள் மட்டக்களப்புகல்வித்திணைக்களத்திற்கு கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சினுல் வழங்கப்பட்டுள்ளன.

இந்நூல்களைகலாசாரபிரதிப் பணிப்பாளர்எஸ்.எதிர்மனசிங்கம் மட்.பிரதிகல்விப்பணிப்பாளர் கே.சோமசுந்தரத்திடம் அண்மையில் கையளித்தார்.

நாவல்.ஆக்கஇலக்கியம்நாடகம் ஆகிய துறைகளைச் சார்ந்த இந்நூல்களின் மொத்தப்பெறுமதி 35 ஆயிரம் ரூபாவாகும் 22 வகையான ஈழத்து எழுத்தாளர்களின் படைப்பிலக்கியங்கள் இதில் அடங்கியிருந்தன.

கல்முனை கல்வித்திணைக்களத்திற்கும்சுமார் 20ஆயிரம் ரூபா பெறுமதியான345புத்தகங்கள் வழங்கப்பட்டன. இவை அம்மாவட்டங்களிலுள்ள பாடசாலை நூல் நிலையங்களுக்கு வழங்கப்படுமென கலாசாரப்பிரதிப்பணிப்பாளர் எஸ் எதிர்மனசிங்கம் தெரிவித்தார் (05)

## பரிபூரணமான மனிதனுவதற்கு உள, உடல் வளர்ச்சி அவசியம்

கடந்த காலங்களில் பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்காக நடத்தக்கூடிய சூழ்நிலை இருக்கவில்லை. ஆனுல் இந்த ஆண்டு வடபகுதிப் பாடசாலைகளில் புத்தூக்கத்துடன் மெய்வல்லுநர் போட்டிகள் வெகுசிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு வட்டு. இந்துக் கல் லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பண்டத்தரிப்பு கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் குறிப்பிட்டார். வட்டுக்கோட்டை கொத்தணி அதிபர் திரு. சி. டாஸ் தலைமையில் இவ்விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஒருவர் பரிபூரண மனிதனுவதற்கு அறிவுக்கு சமமாக உடல் உள வளர்ச்சி பெறவேண்டும். உலக சுகாதார நிறுவனம் உடல் உள, அறிவு, சமூக முன்னேற்றங்களில் அதிக கவனஞ்செலுத்தி வருகிறது. என்றார்

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து.வைத்திலிங்கம் பரிசில்களை வழங்கினுர். (45)

## இந்திய மீனவர்களினுல் வடமராட்சி மீனவர் பாதிப்பு

இந்திய மீனவர்களால் வடமராட்சிப் பகுதி மீனவர்கள் பெரும் தொல்லைகளையும், பாதிப்புக்களையும்எதிர்நோக்கி வருவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாகப் பாக்கு நீரிணையில் வடமராட்சிக் கரைக்கு அண்மித்த பகுதிகளில் இந்திய மீனவர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இதனுல் வடமாராட்சி மீனவர்களின் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் மீன்பிடி உபகரணங்களான வலை, மீன்கூடு யோன்றவை சேதமாக்கப்பட்டும், களவாடப்பட்டும் வருவதாக மீனவர்சங்கத் தலைவர்களிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (39)

## ஆணையாளரை முன்னேற்றசங்கம் பாராட்டுகிறது

பாஷையூரில் சீர்கேடான நிலையிலிருந் குழாய் நீர் விநியோகத்தைச்சீரமைக்க உடன் நடவடிக்கைகள் மேற் கொண்டமைக்காகப் பாசையூர் மக்கள் முன்னேற்றச் சங்க.சனசமூக நிலையம் யாழ்.மாநகர ஆணையாளர் எஸ்.பி.பாலசிங்கத்திற்குப் பாராட்டும் நன்றியும் தெரிவித்துக் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

மேலும் சேதமடைந்துள்ள குழாய் நீர்க் கம்பங்களைத் திருத்தியும்,குழாய் நீர்க் கம்பங்களில் பொருத்தப்படாமல் இருக்கும் பைப்புக்களை மீண்டும்,பொருத்துவதின் மூலமும் குழாய் நீர் வீண் விரயமாகி வருவதைத்தடுக்க முடியுமென்றும் பாஷையூரில் மக்கள் முன்னேற்றச்சங்க சனசமூக நிலையம் யாழ்.மாநகர ஆணையாளரைக்கோரியுள்ளது.(36)

## அவசரகாலச் சட்டம் நீடிப்பு

அவசரகாலச் சட்டம் மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான பிரகடனத்தை ஜனதிபதி ஆர். பிரேமதாஸ விடுத்துள்ளார்.

## யாழ். மாவட்ட எரிபொருள் தட்டுப்பாடு நீங்குகிறது

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக ஏற்பட்டு வந்த பெற்ருேல் தட்டுப்பாடு உடனடியாக நீங்குமென தெரிவிக்கப்படுகின்றது

யாழ் பெற்ருேலியக் கூட்டுத்தாபனத்தில் பழுதடைந்த பெற்ருேல் தாங்கிகள் திருத்தப்படுவதற்காக கொழும்புக்கு அனுப்பப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதனுலே கடந்த சில தினங்களாக பெற்ருேல்தட்டுப்பாடு நிலவியது.

நேற்று முன்தினம் வழமை போல்பெற்ருேல் வழங்கும் வேலைகள்இடம் பெற்றன. அத்துடன் போதியளவு பெற்ருேல் கையிருப்பில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

## ஒட்டுசுட்டானில் அழகுராணிப் போட்டி

சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு ஒட்டுசுட்டன் பிரதேசத்தில் ஏப்ரல் 15 ம் திகதி முதல் முறையாக, பதினறுவயதிற்கும் இருபத்தேழு வயதிற்கும் இடைப்பட்ட திருமணமாகாத பெண்களுக்கான அழகுராணிப் போட்டிகள் நடைபெறவுள்ளன. (46)

## முரசொலிக்கு வந்த கடிதம்

### பெரியமடு பாடசாலையில் வர்த்தகப்பிரிவு ஆரம்பமாகுமா?

ஆசிரியர்
முரசொலி

மன்னுர் மாவட்டத்திலுள்ள பெரியமடு மகாவித்தியாலயத்தில் சுமார் 700 மாணவர்கள் வரை கல்வி கற்கின்றனர். பின்தங்கிய பகுதியில் அமைந்துள்ள இப்பாடசாலையில் ஆசிரியர் பற்றுக்குறை கட்டடத் தளபாடங்களின் பற்றக்குறை என்பனவற்றுக்கு மத்தியிலும், க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு சுமார் பத்து வருடங்களுக்கும் மேலாகின்றன. இங்கிருந்து பலர் பல்கலைக்கழகத்திற்கும் சென்றுள்ளனர். எனினும் கலை தவிர்ந்த ஏனைய பிரிவுகளிற் கல்வியை மேற்கொள்ள ஆர்வம் கொண்ட மாணவர்கள் தூர இடங்களிலுள்ள வசதியான ஏனைய பாடசாலைகளிற்கே செல்ல வேண்டியுள்ளது. பெரும்பாலும் வறிய விவசாயிகளின் பிள்ளைகளான எமக்கு இது மிகவும் தாங்கமுடியாத சுமையே. எனவே கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகள், மற்றும் இதனுடன் தொடர்புடைய அனைவரும், இது விடயத்தில் அக்கறை கொண்டு எமது பாடசாலையில உயர்தர வர்த்தகப்பிரிவை ஆரம்பித்து நாம் கற்பதற்கு எமக்கு வசதி செய்து தருமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

எம் சாருக்
எச். சலீம்

பெரியமடு.

## சுவையான செய்திகள்

### கர்ப்பத்தடை மாத்திரைகைகள் பறிபோயின

சூசன்னே ஜோரேமி என்றஅவுஸ்திரேலியப் பெண் பிரசவித்த போதுஅவளுக்குதாலிடோமைட் என்றவியாதியின் தாக்குதல் காரணமாக இருக்கைகளையும் வெட்டி எடுத்து விட்டார்கள். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு கரிப்பமாகாமல் இருப்பதற்காக இப்பெண் பயன் படுத்திய சில கர்ப்பத்தடை மாத்திரைகளேஇந்த தாலிடோமைட் வியாதி வரக் காரணமாயிற்று பிரசவத்திற்குப் பின் இவருக்கு கைகள் இல்லாமல் போய்விட்டன. இருந்தாலும் தன் இருகால்களாலேயே தனது எல்லாவேலைகளையும் இவள் செய்து கொள்கின்ருள் சாப்பிடுவது எழுதுவது முதல் கார் ஓட்டுவது வரை.

### இந்தளவு சிறிய தலைக்கு பெரிய தலைப்பாகையா?

இந்தோனேசியாவில் சுமத்ரா அருகில் உள்ள இன்டாலர்க்கா தீவின் தலைவன் அணியும்தலைப்பாகைதான் உலகிலேயே மிகப்பெரியதலைப்பாகை. இந்தத் தலைப்பாகையின் குறுக்களவு ஐந்து அடி. அலங்கார நிபுணர்கள் பலர் நான்கு இரவுகளும், நான்கு பகல்களும் மிகப் பாடுபட்டு இந்தத் தொப்பியைத் தயாரிக்கின்ருர்கள்.

## மட்டு. நூலகம் அதிக நேரம் திறக்கப்படுமா?

மட்டக்களப்பில் சகல அலுவல்களும் வழமைக்குத் திரும்பிய போதிலும் மட்டக்களப்பு பொது நூலகம் மூடப்படும் நேரத்தில் மட்டும் மாற்றம் செய்யப்படவில்லை. முன்னர் இரவு 8 மணிவரையும் திறந்திருக்கும் பொது நூலகம் பின்னர் நாட்டிலுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மாலை 6 00 மணி முதல் மூடப்பட்டு வந்தது, தற்பொழுது சகலஅலுவல்களும் வழமைக்குத் திரும்பியதுடன் போக்குவரத்துச் சேவைகளும்சிரடைந்துள்ளமையால் வழமைபோல் இரவு8 மணி வரை பொது நூலகம் திறக்கப்பட வேண்டும் என வாசகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அலுவலகங்களில் வேலை பார்ப்போரும் ஏனையோரும் 6மணிக்குப்பின்னரேபொது நூலகத்திற்குச் செல்லநேரம் கிடைக்கிறது. ஆகவே பொது மக்களின் வசதிக்காக இரவு எட்டு மணிவரையும் திறக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (05)

## நிதானமற்றசாரதிகள் ஆண்களே!

ஆசிரியர்
முரசொலி

தங்களது பத்திரிகையில் கடந்த 21-ம் திகதி முரசொலிக்கு வந்த 'கடிதம் பகுதியில்பிரசுரிக்கப்பட்டிருந்த ''சாலிகள் சாலைகளில் சார்க்கஸ் பல் இழந்து பரிதவிப்போர் பலர்''. என்ற தலைப்பிட்ட கடிதத்தைக் கண்ணுற்றேன். இது தொடர்பாக சில கருத்துக்களைக் குறிப்பிடுகிறேன் அண்மையில் இந்தியாவில் சாலை விபத்துக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் 90 வீதமான பெண்கள் நிதானமாகவும், வீதி ஒழுங்குகளை அவதானித்தும் வாகனங்களைச் செலுத்துகின்றனர் என்று கணிப்பிடப்பட்டுள்ளது. ஆண்களில் பெரும்பாலானோர் மதுபோதையிலும், வீதி ஒழுங்குகளை அலட்சியம்செய்துகொண்டும், வாகனம் செலுத்துகிறோம் என்ற பிரக்ஞை இன்றி, அவதானமின்றி வாகனங்களைச் செலுத்துகின்றனர் என்றும், இதனுல் மிகக்கூடுதலான விபத்துக்கள் ஆண்களாலேயே ஏற்படுகின்றன என்றும்கணிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் பதியப்பட்டுள்ள விபத்துக்களில், சம்பந்தப்பட்டோரில் பெரும்பான்மையானோர் ஆண் சாரதிகளே என்றும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இது இவ்வாறிருக்க இக்கடிதத்தை எழுதிய நபர் கிணற்றுத் தவளைபோல் இருந்துகொண்டு பெண்கள்பால் உண்டான பதற்றம், கோழைத்தனம் காரணமாக நிதானமின்றிப்புலம்பி இருக்கிருர். நண்பரின் பலவீனத்தைக் களைய நாம் உதவுவோம். அவர் முதலில் வெளியில்வந்து உலகத்தைப் பார்க்கட்டும்.


யாழ்நகர் புளோரன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்ரல்- சென் ஜோன்ஸ்


# 87-வது கிரிகெட் போட்டி இன்று

தொகுப்பு. கப்டன் டி.குணசிங்கம்
[விளையாட்டுத்துறை நிருபர்]



சென். ஜோன்ஸ் கல்லூரி அணி

சென். ஜோன்ஸ் கல்லூரியும், யாழ். மத்திய கல்லூரியும் 5 வருடகால இடைவெளியின்பின் இன்றும் நாளையும் யாழ். மத்தியகல்லூரித் திடலில் மோதிக்கொள்ளவுள்ளன இவ்விரு அணிகளுக்குமிடையேயான கிரிக்கெட்போட்டி வரிசையில் இது 87 வது போட்டியாகும் இவ்விரு கல்லூரிகளுக்கும் இடையில் நடைபெறும் 'BIG MATCH' என்று அழைக்கப்படும் இப்போட்டி வெகு பழமை வாய்ந்தது. கிட்டத்தட்ட ஒரு நூற்ருண்டு காலமாய் நடைபெற்று வருகிறது. யாழ்ப்பாணத்தில் கல்லூரிகளிடையே கிரிக்கட் ஆட்டம் அறிமுகமான காலம்தொட்டு இது நடைபெற்றுவருகிறது. ஆனல் தொடக்க கால ஆவணங்களும், பதிவேடுகளும் காலக்கிரமத்தில் சிதைந்து போனதினுல் ஆதிகால சிலபோட்டிகளின் விபரங்களை சரியாக தொரிந்துகொள்ள இயலவில்லை. இருந்தும் இப்போட்டித்தொடரில் 31 போட்டிகளில் சென். ஜோன்ஸ் கல்லூரியும், 20 போட்டிகளில் யாழ். மத்திய கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன. 27 போட்டிகள் வெற்றி தோல்வி இன்றி 'ட்ரோ'வில் முடிவுற்றுள்ளன. இப்போட்டித் தொடரில் காலாகாலமாய் நினைவுகூரக்கூடிய சில சாதனைகள்:- துடுப்பாட்டம்:- 1928-ம் ஆண்டில் 9 இலக்குகள் நஷ்டத்திற்கு சென். ஜோன்ஸ் கல்லூரி பெற்ற 303 ஓட்டங்கள். 1982-ம் ஆண்டில் யாழ். மத்திய கல்லூரி 5 இலக்குகள் இழப்பிற்கு பெற்ற 309 ஓட்டங்கள் அதே ஆண்டில் மத்திய கல்லூரியைச் சேர்ந்த பி. பிரகலாதன் பெற்ற 125 ஓட்டங்கள். பந்துவீச்சு:- 1910-ம் ஆண்டு சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வீரன் சி. ஏ. சண்முகம் முதலாவது இன்னிங்சில் 32 ஓட்டங்கட்கு 8 இலக்குகள் பெற்றமை. 1926-ம் ஆண்டில் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி வீரன் கே. நாகலிங்கம் ஒரு இனிங்சில் 18 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை கைப்பற்றியமை. 1951-ம் ஆண்டில் யாழ் மத்திய கல்லூரி வீரன் வி. சண்முகம் ஒரு இனிங்சில் 26 ஓட்டங்கட்கு 9 இலக்குகள் பெற்றமை. 1960-ம் ஆண்டு சென். ஜோன்ஸ் அணி வீரன் ஏ ஐ. சோமநாதர் ஒரு இனிங்சில் 18 ஓட்டங்களுக்கு 8 இலக்குகள் வீழ்த்தியமை என்பனவாகும். மேலும் சென் ஜோன்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த J. M. சிங்கநாயகம் 1920, 1921,1922, 1923ம் ஆண்டுகளில் தொடர்ந்து அணிக்கு தலைமைவகித்து இப்போட்டியில் கலந்துகொண்டமை ஒரு விஷேட சாதனையாகும். ✶ இரு கல்லூரி அணி ரசிகர்கட்கும் கல்லூரி அதிபர்களின் பணிவான வேண்டுகோள்:- 5 வருட இடைவெளிக்குப் பின் நடைபெறும் வரலாற்று முக்கியத்துவம் வய்ந்த இப்போட்டி சிறப்பாக அமையவேண்டும். என்பதே எல்லோரினதும் ஏகோபித்த ஆசை. போட்டி சோபிக்க வேண்டும் எனில் நிச்சயமாக ரசிகர்கள் வீரர்களை உற்சாகமூட்டத்தான் வேண்டும் ஆனல் உற்சாகம் ஊட்டுகிறோம் என்று சொல்லி விளையாட்டு வீரர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் இடைஞ்சலை உண்டாக்காதீர். மேலும் 'தார்பீப்பா' வாத்திய கோஷ்டிகளே! உங்கள் வாத்தியத்தை காலம் நேரம் பார்த்து அடக்கி வாசியுங்கள் சில சமயம் நீங்கள் எழுப்பும் (பயங்கர) ஓசையில் 'ரிப்' சத்தம நடுவர்கட்கு கேட்காமலும் போகக் கூடும்.



மத்திய கல்லூரி அணி

## அன்னை பூபதிக்கு அர்ப்பணம்!

போயின உயிர்கள் போருக்காக!-உரம்
ஆயின விழுதலை வேருக்காக!-உதிரம்
வடித்தது வாழும் ஊருக்காக!-கவிதை
படித்தது ஈழச்சீருக்காக!-அட!
இத்தனை நிகழ்ந்ததும் யாருக்காக?-பலர்க்கு
இதயம் இருப்பதே பேருக்காக!

✶ ✶

சிந்துநதி போலிங்கே
சீறிவரும் செங்குருதி
வந்துவிழும் போதிலுயிர் போச்சு!-இனி
வாராதோ விடுதலையின் மூச்சு

பாரதி சீலன்

## இன்று நாள் எப்படி?

மேடம்: உடல்ரோகம், வாகன நஷ்டம் பணத்சடை, வெளியூர் போனவர்கள் வருகை, வணிகர்கள் இலாபம்.

இடபம்: உயர்பதவி. உத்தமர்களுறவு, வாக்குப்பலிதம், கல்வியாற்தொழில் காதலர் ஒன்று சேருவர்.

மிதுனம்: சத்துருபயம், வாகன மாற்றம், உயர்பதவி, உத்தமருறவு, வணிகர்க்ள் கடற்தொழில் மூலம் இலாபம்.

கடகம்: பெரியோராசி. உயர்பதவி, கல்வியால் உயர்வு, பிரிந்தகாதலர் ஒன்று சேருவர், புதுத்தொழில்.

சிங்கம்: மாதா வழி யுதவி, வாகனசுகம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

கன்னி: வாகன இலாபம், உயர்பதவி, விவாகநிச்சயம், தூரதேச பிரயாணம், தேடியவர் வருகை.

துலாம்: பணவரவு, பெண்களாலுதவி, பெரியோராசி, உயர்பதவி, வணிகர்கள் இலாபம்.

விருச்சிகம்: பெண்களாற்பகை, பெரியோராசி, வாகனமாற்றம், வணிகர்கள் கடற்தொழில் மூலம் இலாபம்.

தனுசு: உயர்பதவி, உத்தமர் உறவு. வாக்குப்பலிதம், கல்வியால் நன்மை, காதலர் மகிழ்ச்சி.

மகரம்: வாக்குப்பலிதம், பணவரவு, வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

கும்பம்: பணவரவு, வாகன சுகம், வணிகர்கள் இலாபம், கலைஞர்கள் கௌரவிக்கப்படல், புதுத்தொழில்.

மீனம்: வாக்குப்பலிதம், பிதாவழியுதவி, உயர்பதவி, எண்ணியது நடக்கும், இளைய சகோதர வழியுதவி, திடீர்ப்பிரயாணம், தேடியவர் வருகை.

யாழ். சோதிடர்
ச அரியநாயகம்

## வானொலியில் இன்று

23.03 90 வெள்ளி

காலை

5.05 திருமுறைப் பாடல்கள் - வி. கணேசலிங்கம்
5.30 பாமாலை-சுப்ரமணிய திருவிருத்தம்
8.00 வாத்திய மஞ்சரி-நிலையவித்துவான் வாசிக்கின்றார்கள்

பகல்

10 00 இசையமுதம்
10.30 பக்திமஞ்சரி
11 00 நாதஸ்வரம்-காருக்குறிஞ்சி பி. அருணாசலம்

மாலை

6 15 திருவாசகம்
6 45 துதிப்பாடற் பயிற்சி-வி.எம். நவரட்ணம்
7.00 களத்துமேடு-கேள்வி பதில்
7.15 விவசாய நாடகம்-வயலோடு வசந்தங்கள்
7.30 தவக்காலக் கத்தோலிக்க நிகழ்ச்சி-மலர் வேந்தன்

இரவு

9.30 "செந்தமிழ் வளர்த்த செம்மல்ள்"-புலோலி வ. கணபதிப்பிள்ளை-பேசுபவர்-க.சி. குலரத்தினம்
9 45 கதாப்பிரசங்கம்-காலனை வென்ற பாலகன்-நிகழ்த்துபவர்: எம். வர்ணகுலசிங்கம்
10 30 நிலைவில் நிறைந்தவை.

## பகுதித் தலைவராக நியமனம்

கடந்த 18 வருடங்களாக மானிப்பாய் இந்துக் கல்லூரியில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றும் திரு. வே. தம்பாப்பிள்ளை அவர்கள் இக் கல்லூரியின் பகுதித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். செல்வி ஆர். மண்டலநாயகம் ஆசிரியர் அவர்கள் இளைப்பாறியதையடுத்து இக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் இப்பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார். (30)

## தொலைத்தொடர்பு ஊழியர்கள் 10000 பேருக்கு சம்பள உயர்வு

தொலைத் தொடர்பு திணைக்களம் கூட்டுத்தாபனமாக மாற்றியமைக்கப்பட்டபின்னர் அங்கு கடமைபுரியும் பத்தாயிரம் ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

மேற்படி கூட்டுத்தாபனத்தின் இயக்குநர் சபை இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதோடு. கூட்டுத்தாபனத்தின் இயக்குநர்சபை தொழிற்சங்கங்களுடன் இது குறித்த கருத்துக்களை கோரியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆயிரம் ரூபா, நாலாயிரம் ரூபா

# இலங்கை வங்கி, மக்கள் வங்கி கிளைகளில் நிவாரணம்

நாளை 24-ம் திகதி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக்கிளையில் ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவுகள் மட்டுவில் தெற்கு, சரசாலை. மட்டுவில் வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

25-ம் திகதி நுணுவில் மேற்கு, நுணுவில் கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு கொடுக்கப்படும்.

இதேசமயம்;

பின்வரும் பிரிவுகளுக்கான உற்பதித்திறன் முயற்சி நன்கொடை ரூபா 4000 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை எட்டு மணிதொடக்கம் பி. ப. ஒருமணிவரைக்கும் சுன்னாகத் திட்டி மக்கள் வங்கிக்கிளையில் வைத்து வழங்கப்படவுள்ளன.

24-ம் திகதி சனிக்கிழமை அராலி மேற்கு, அராலி தென்கிழக்கு, அராலி வடக்கு, சுழிபுரம் மேற்கு. சுழிபுரம் கிழக்கு, மூளாய் ஆகிய பிரிவு மக்களுக்கும் 25-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்கானை மேற்கு. சங்கானை தெற்கு; சங்கானை கிழக்கு, தொல்புரம் சங்கரத்தை, வட்டுக்கோட்டை தெற்கு, வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை கிழக்கு, பொன்னாலை ஆகிய பிரிவு மக்களுக்கும் வழங்கப்படும்

மேலும் ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் எதிர்வரும் 24-ம் திகதி சனிக்கிழமை இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையில் கரவெட்டி மேற்கைச் சேர்ந்தவர்களுக்கும் பருத்தித்துறை கிளையில் அம்வாய் மேற்கு, துன்னாலை வடக்கு, ஆகிய கிராம சேவகர் பிரிவினருக்கும் வழங்கப்படும். வண்ணார்பண்ணை வடக்கு, மேற்கு ஆகிய பிரிவினருக்கு ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கிளையில் ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

25-ம் திகதி இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்தோருக்கும் பருத்தித்துறைகிளையில் புலோலி மேற்கு, அப்பன் ஆகிய பகுதியைச் சேர்ந்தோர்க்கும் ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் வழங்கப்படும் இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையில் கரணவாய் கிழக்கு, மேற்கு, மத்தி ஆகிய பகுதியைச் சேர்ந்தோர்க்கும் வழங்கப்படும்.

இதே சமயம் இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளையூடாக வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதி கிளையூடாக வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி 24-ம் திகதி மானிப்பாய் கிராம சேவகர் பிரிவினருக்கும். 25-ம் திகதி சுதுமலை பிரிவினருக்கும் ஆஸ்பத்திரி வீதி கிளையில் ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

மேலும் காங்கேசன்துறை இலங்கை வங்கியில் சுயதொழில் பாதிப்புக்காக ஊக்குவிப்புப் பணம் நிவாரணம் ரூபா 4000 சனிக்கிழமை; நகுலேஸ்வரம், துர்க்காபுரம், காங்கேசன்துறை தெற்கு, தெல்லிப்பளை வடமேற்கு, தெல்லிப்பளை, பன்னாலை, மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி, வீமன்காமம், கட்டுவன், மயிலிட்டி தெற்கு, குரும்பசிட்டி, வசாவிளான், மயிலிட்டி வடக்கு. மயிலிட்டித் துறை, பலாலி கிழக்கு, பலாலி மேற்கு கிராமசேவகர் பிரிவுக்கும் ஞாயிற்றுக்கிழமை அளவெட்டி வடக்கு, தையிட்டி, காங்கேசன்துறை வடக்கு, அளவெட்டி தெற்கு கிராமசேவகர் பிரிவுகளுக்கும் வழங்கப்படவுள்ளது. (04)

### ★ 1200 படுக்கைகளைக் கொண்ட

# திருநெல்வேலியில் நவீன போதனா வைத்தியசாலை

திருநெல்வேலியில் நவீன போதனாவைத்தியசாலை அமைக்கும் திட்டம்பற்றி சுகாதார அமைச்சு ஆலோசனை நடாத்திவருவதாகத் தெரியவருகின்றது. இத்திட்டத்தின்மூலம் 1200 கட்டில்கள்கொண்ட நவீன மயப்படுத்தப்பட்ட வைத்தியசாலை அமைக்கப்படும்.

யாழ் போதனா வைத்தியசாலை படிப்படியாகப் புதிய வைத்தியசாலைக்கு இடமாற்றப்படும். யாழ்வைத்தியசாலையில் விசேட பிரிவுகள் மட்டும் இயங்கும். தற்போது திருநெல்வேலியில் இயங்கும்விவசாயப் பயிற்சிப்பாடசாலை கிளிநொச்சிக்கு இடமாற்றப்பட்டு அவ்விடத்திலே இந்த நவீன வைத்தியசாலை அமைக்கப்படும்.

இந்த நவீன வைத்தியசாலை ஜப்பானிய அரசின் உதவியுடனே அமைக்கப்படும். நவீன இயந்திரங்களும்இங்குபொருத்தப்படும்,

இதேவேளை யாழ்பல்கலைக்கழக மருத்துவபீடமும் தமது பல்கலைக் கழகத்தினுள் 500 படுக்கை வசதி கொண்ட போதனா வைத்தியசாலை அமைக்க ஆலோசித்து வருவதாகத் தெரியவருகின்றது. (03)

## போதைவஸ்து எதிர்ப்பு மாநாடு

போதை வஸ்து தடுப்பு நடவடிக்கைகளை எவ்வாறு மேற் கொள்ளலாம் என்பது தொடர்பான மாநாடு ஒன்று ஏப்பிரல் 9 முதல் 11 திகதி வரை லண்டனில் நடைபெறவுள்ளது.

## வடகிழக்கில் சம்பத் வங்கி

வடக்கு கிழக்கு பகுதிகளில் சம்பத் வங்கியின் கிளைகளைத் திறக்க நடவடிக்கை எடுக்க விருப்பதாக சம்பத் வங்கியின் பிரதித் தலைவர் என்.யூ: ஜெயவர்த்தன பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# இரண்டாயிரம் குடும்பங்களுக்கு இரண்டாயிரம்ரூபா நிவாரணம்

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாயிரம் ரூபா நிவாரணம் பெறவேண்டிய குடும்பங்கள் இரண்டாயிரம் மட்டுமே உள்ளன. இவர்களுக்குரிய குடும்ப அட்டைகள் கொழும்பிலிருந்து வந்ததும் உடனடியாக வழங்கப்படவுள்ளது.

நீண்டகாலமாக இம்மாவட்டத்தில் நிவாரணக் கொடுப்பனவுகள் மிகவும்தாமதமாகவே மக்களுக்கு கிடைத்துவந்தது. இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்பு கவனக்குறைவாக இருந்ததாலும் பணம் கொடுப்பதில் தாமதத்தாலும் கடந்த ஆண்டில் வழங்கப்படவேண்டிய நிவாரணக் கொடுப்பனவுகள் இன்னும் வழங்கப்படாமல் இருந்து வந்துள்ளது.

தற்போது கிளிநொச்சி அரசாங்க அதிபராகப் பதவியேற்ற திரு. கா. மாணிக்கவாசகர் அவர்களின் துரிதமுயற்சியால் அடுக்கி வைக்கப்பட்ட நிவாரண விண்ணப்பப் படிவங்கள் பரிசிலனை செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. (35)

# கஷ்டப்பிரதேச கல்வி நிலைபற்றி கிளிநொச்சியில் ஆராய்வு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் "இப்ரூ" வெளிநாட்டு நிறுவனமும் இணைந்து நடாத்தும் இரண்டு நாள் கருத்தரங்கு ஒன்று நாளையும் நாளை மறுதினமும் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நிதிச் செயலாளர் திரு என். சோதிநாதன் இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றார்.

கஷ்டப் பிரதேச மக்களின் கல்வி நிலையற்றி இக்கருத்தரங்கில் ஆராயப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது.

நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளார்கள், (43)

# வரதரை இந்தியஅமைதிப்படை அழைத்துச் செல்லவில்லை- கல்கத்

வடக்கு கிழக்கு மாகாண சபை முதல்வர் திரு. வரதராஜப்பெருமாளை அமைதிப்படை அப்புறப்படுத்தவில்லை என இந்திய அமைதிப்படை தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கல்கத் தெரிவித்துள்ளார்.

அந்த விடயம் எனக்கு மேலுள்ளது அது ஓர் அரசியல் விடயம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ் தபாலக ஊழியர்களின் போராட்டம் கைவிடப்பட்டது

நேற்றைய தினம் யாழ்தபாற்திணைக்கள சமயா சமய ஊழியர்கள் மேற்கொண்ட வேலைமறிப்புப் போராட்டம் காலை 11 மணியளவில் கைவிடப்பட்டது.

இவர்கள் முன்வைத்த எட்டு கோரிக்கைகளை 24 மணி நேரத்திற்குள் தீர்த்து வைப்பதாக யாழ் மாவட்ட தபால் அத்தியட்சகர் உறுதியளித்ததைத் தொடர்ந்தே நேற்று வேலைமறிப்புப் போராட்டம் கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (03)

# குடும்பநல சேவையாளரின் மேலதிக கொடுப்பனவு ரத்து

வைத்தியசாலை குடும்ப நல சேவையாளர்களுக்கான மேலதிகக் கொடுப்பனவு சம்பந்தமாக இதுவரை எந்த வித சுற்று நிருபமும் சுகாதார அமைச்சினால் அனுப்பப்படாத படியால் மேற்படி சேவையாளர்கள் தங்கள் கடமைநேரம் குறித்துவிசனமடைந்துள்ளனர்

இது இவ்வாறிருக்க அவர்களின் கடமை நேரம் சம்பந்தமாக சமீபத்தில் சுகாதார அமைச்சினால் அனுப்பப்பட்ட வேலைநேரம் காலை 7மணி முதல் மாலை 7 மணி வரை என வரையறுக்கப்பட்டுள்ளது. இதற்குமுன் அவர்களுக்கு வழங்கிய 7மணித்தியாலயம் தவிர்ந்த மேலதிக நேர சேவைக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது (48)

## காணி...

பதிவுகளை மேற்கொள்வதற்காக யாழ்மாவட்ட காணிப் பதிவகத்தை நாடுகிறார்கள். அங்கு ஒழுங்கின்படியே தற்போது காணி உறுதிப்பதிவு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன வங்கிகள் இவ்விடயத்தில் எவ்வித சலுகையும் வழங்க முடியாதெனத் தெரிவித்துள்ளன எனத் தெரியவருகின்றது.

காணிப் பதிவகமும் மாற்று நடவடிக்கை எடுக்கமுடியாது எனக்கைவிரித்துள்ளதாக தெரியவருகின்றது. (03)

## இலங்கை...

யையும் ஜனாதிபதி பாகிஸ்தானுக்கு சுட்டிக்காட்டினார் என பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்,

மாலைதீவில் மாநாட்டை நடாத்துவதை இலங்கை ஏற்றுக்கொள்ளமாட்டாது திட்டமிட்டபடி கொழும்பிலேயே நடைபெறவேண்டும். இலங்கையின் இந்நிலைப்பாட்டை பாகிஸ்தான் அமைச்சர் கான் ஏனைய சார்க்நாடுகளுக்குஎடுத்துக் கூறவுள்ளார் எனவும் அமைச்சர் விஜேரட்ன தெரிவித்தார்.

## கொக்குவில்...

ளது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

இவ்விரு அதிபர்களினது இடமாற்றங்களை சம்பந்தப்பட்ட பாடசாலைமாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் விரும்பாது அதிருப்தி தெரிவித்ததோடு, வன்மையான ஆட்சேபம் தெரிவித்து இடமாற்றங்களை இரத்துச் செய்யக் கோரியிருந்தனர். இதன் விளைவாகவே இவ்விடமாற்றங்களை கல்வி அமைச்சு இரத்துச் செய்ததாக அமைச்சின்செயலாளர் இ. த. ஆ. ச. பொதுச் செயலாளரிடம் தெரிவித்துள்ளார்.

## புலிகள்...

ஜனாதிபதி பிரேமதாஸ இந்தியாவுடன் நட்புறவு உடன்படிக்கை குறித்து பேச்சுகளை நடாத்துவார் எனவும் அமைச்சர் சொன்னார்.

## ஆள்மாருட்டம்...

அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## அம்பாறை ..

கள் வழங்கப்பட்டன. இதில் 2.757 சிங்களவர்கள் தெரிவு செய்யப்பட்ட அதேவேளை 1084 முஸ்லிம்களும்233 தமிழர்களும் மட்டுமே இந்தக்காணிப் பங்கீட்டில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்,

தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இறக்காமம், வரிப்பத்தான் சேனை போன்ற பகுதிகளில் 720 சிங்களவர்களுக்கு காணிகள் வழங்கப்பட்டிருக்கும் அதே வேளை 6தமிழர்களுக்கும் 4முஸ்லிம்களுக்கும்மாத்திரமே காணிகள் பகிர்தளிக்கப்பட்டுள்ளன, (05)

## பட்டம்...

திணைக்களம் நடவடிக்கை எடுக்கின்றது.

யாழ் கல்வித்திணைக்கள நிதிப்பிரிவு சம்பளமாற்றம், பாக்கி கணித்தல் விடயங்களை ஆராய்ந்துநடவடிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளது.

பட்டதாரிச் சம்பளம் உடன் வழங்க சாத்தியப்படாவிட்டாலும் 1990மே மாதமளவில் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (37)


## மட்டுநகரில் முரசொலி

### விற்பனை முகவர்கள் தேவை

முரசொலி பத்திரிகைக்கு பின்வரும் இடங்களுக்கு முற்பணம் கட்டக்கூடிய விற்பனை முகவர்கள் தேவை

★ வாழைச்சேனை

★ செங்கலடி

★ மட்டக்களப்பு

எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்

பொது முகாமையாளர்
முரசொலி
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்;


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நி[illegible]த்திலுள்ள அச்சகப்பிரிவில் 23-03-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org